Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, 2023 ஜுன் 30

## நெஸ்லே லங்கா நிறுவனம், பங்குச்சந்தையிலிருந்து நீங்குவதற்கு தனது பங்குதாரர்களிடமிருந்து அனுமதியைப் பெற்றுள்ளது

*இலங்கை மீதான தனது அர்ப்பணிப்பில் தொடர்ந்தும் உறுதியாக உள்ளது*

நெஸ்லே லங்கா பிஎல்சியின் சாதாரண வாக்குரிமைப் பங்குகளை கொழும்பு பங்குச் சந்தையில் இருந்து நீக்குவதற்கான விசேட தீர்மானம், 2023 ஜுன் 30 அன்று நடைபெற்ற அதிவிசேட பொதுக் கூட்டத்தில் நெஸ்லே லங்கா பிஎல்சி பங்குதாரர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதில் எழுபத்தைந்து சதவீதத்திற்கும் (75%) அதிகமான பங்குதாரர்கள் நேரில் அல்லது பதிலாள் வாக்களிப்பு மூலம் அதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். நெஸ்லே லங்காவின் பணிப்பாளர் சபை, பல வருடங்களாக நிறுவனத்தின் மீது நம்பிக்கை வைத்து, பங்குச்சந்தையிலிருந்து நீங்குவதற்கான தீர்மானத்தை ஏற்றுக்கொண்டமைக்காக அதன் பங்குதாரர்களுக்கு தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தது.

நெஸ்லே லங்கா நிறுவனம் தனது முக்கிய வணிக நடவடிக்கைகளில் தனது கவனத்தை மேலும் வலுப்படுத்த உதவுவதற்காக 2023 ஆம் ஆண்டு மே மாதம் கொழும்பு பங்குச் சந்தையில் இருந்து நீங்கிக் கொள்வதற்கான தனது விருப்பத்தைத் தெரிவித்தது. அதன் பங்குதாரர்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்புதலைத் தொடர்ந்து, நிறுவனம் இப்போது இலங்கையின் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் முறையான அனுமதியைப் பெற்று, உரிய ஒழுங்குமுறைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்க அதன் பங்குகளை நீக்கிக் கொள்ளும்.

நெஸ்லே லங்கா இலங்கை மற்றும் அதன் மக்கள் மீதான அதன் அர்ப்பணிப்பில் தொடர்ந்தும் உறுதியாக உள்ளது. 115 ஆண்டுகளுக்கும் மேலான அதன் பயணத்தில், நிறுவனம் தொடர்ந்து நாட்டில் முதலீடு செய்து, ஆரோக்கியமான குடும்பங்கள், வலுவூட்டப்பட்ட சமூகங்கள் மற்றும் பசுமையான பூமியை உருவாக்க உதவி வந்துள்ளது. இந்த உறுதிப்பாட்டிற்கு சான்றாக, நெஸ்லே லங்கா நிறுவனம் அதன் திறன் விரிவாக்கத்தில் ரூபா. 2 பில்லியன் மற்றும் உயிர்வாயு கொதிகலனில் ரூபா. 1 பில்லியன் தொகைகளை முறையே 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் முதலீடு செய்துள்ளது.

'தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறைகள் என அனைவரதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு உணவின் ஆற்றலை வெளிக்கொண்டு வருதல்' என்ற அதன் நோக்கத்தால் உந்தப்பட்டு, நெஸ்லே நிறுவனம் இலங்கையில் தலைமுறை தலைமுறையாக இளமை முதல் முதுமை வரை உயர்தர உணவு மற்றும் பான வகைகள் மூலம் ஊட்டமளித்துள்ளது. 115 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து, இன்று, நெஸ்லே இலங்கை மக்களின் வாழ்க்கையின் ஒரு அங்கமாக மாறியுள்ளது. 24,000 க்கும் மேற்பட்ட இலங்கை பால் உற்பத்தி மற்றும் தென்னை செய்கையாளர்கள் மற்றும் வீடுகளில் தென்னை வளர்ப்பவர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்திற்கு பங்களித்து வருவதுடன், 800 க்கும் மேற்பட்டவர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பினை வழங்கியுள்ளது. கடுமையான பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாடுகளைப் பயன்படுத்தி, குருநாகலிலுள்ள தனது அதிநவீன தொழிற்சாலையில், இலங்கையில் விற்பனை செய்யப்படும் 90% க்கும் அதிகமான தயாரிப்புகளை உற்பத்தி செய்கிறது.

---


**தொடர்புகளுக்கு:**

| | | | |
|---|---|---|---|
| நிறுவன பொது விவகாரங்கள் | தமித குலதுங்க | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |
| நிறுவன தொடர்பாடல்கள் | இசுரி அழகக்கோன் | +94760395781 | Isuri.Alahakoon@lk.nestle.com |